# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST – 2008

## SOC 3.15 – INTRODUCTION TO CRIMINOLOGY

**முதலாம் வினாவுக்கும்** (கட்டாயம்) ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. 'குற்ற மனமின்றிக் குற்றமில்லை' என்பது பொது விதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் கடும் பொறுப்புக் குற்றங்கள் கோட்பாடு இது தொடர்பில் முற்றிலும் வேறுபாடு கொண்டதாக அமைகின்றது. இக்கூற்றினை இலங்கைத் தண்டனைச் சட்டக் கோவையின் இயைபான ஏற்பாடுகளுடன் உதாரணங்கள் தந்து விளக்குக.

02. "இலங்கையில் குற்றவியல் நீதிமன்றங்களின் செயற்பாடுகளானது குற்றங்களை முழு அளவில் கட்டுப்படுத்துகின்றது என்று கூறி விட முடியாது" இக்கூற்றை ஆராய்க.

03. "மரண தண்டனையின் நிறைவேற்றமானது குற்றங்களைச் சமூகத்தில் குறைவடையச் செய்கின்றது" இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அல்லது உடன்படவில்லையா? தகுந்த காரணங்களுடன் ஆராய்க.

04. இலங்கையில் 2005 ம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இல்ல வன்முறைகள் தடுப்புச் சட்டமானது குடும்ப உறவுகள் தொடர்பில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் பற்றி விரிவாக ஆராய்க. உமது விடையானது குறிப்பாக குடும்ப உறவில் ஏற்படுத்துகின்ற சாதக, பாதகமான விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

05. 'குற்றவியல் தவறு', 'குடியியல் தவறு' ஆகிய இரண்டையும் ஒப்பிட்டு ஆராய்க.

06. இலங்கையில் சம காலத்தில் அமுலில் உள்ள நீதிமன்றங்களின் பதவரிவை, அவற்றின் நியாயாதிக்கம் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

07. மட்டுப்பாடற்ற ஊடகச் சுதந்திரம் சமுதாயத்தில் குற்றச் செயல்களை அதிகரிக்கச் செய்யும் காரணியொன்றாகும் எனக் கூறப்படுகின்றது. ஊடகச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படுவதால் குற்றச் செயல்கள் குறையச் சந்தர்ப்பம் உண்டா என்பது பற்றிச் சமகால நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி இக்கூற்றினை ஆராய்க.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு (03) குறிப்புரை தருக.

    (அ) விவாகரத்துக்கான அடிப்படைக் காரணங்கள், விவாகரத்தின் தாக்கங்கள்
    (ஆ) திருமண வாக்குறுதி மீறல்
    (இ) திருமணம் மனிதர்களின் சமூக அந்தஸ்தை தீர்மானிக்கும் ஏதுக்களில் முக்கியமானது
    (ஈ) நீதி மன்றங்களில் பிணை வழங்கல்

***